
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 14 அக்டோபர் - 2001 இதழ் - 10



வெளியிடுவோர்

கிறிஸ்துவின் சபையார்,

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

© 04257 - 20030 e-mail : kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

**தொடர்பு முகவரி**

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

## ஆசானின் அறிவுரையிலே...

| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | **காங்கேயம் வாருங்கள் - அக்டோபர் 25, 26** | 9 |
| 3. | சிலுவையில் தொங்கிய கள்ளன் | 10 |
| 4. | பெண்கள் பகுதி | 13 |
| 5. | வாலிபர் பகுதி | 16 |
| 6. | சங்கீதம் ஒரு கண்ணோட்டம் | 19 |
| 7. | சிறுவர் பகுதி | 20 |
| 8. | **வாலிபர்களுக்கு ஒரு முக்கிய அறிவிப்பு** | 22 |
| 9. | வெளிப்படுத்தின விசேஷம் | 23 |
| 10. | திருமறை மூப்பர்களால் ... | 28 |

THIRUMARAI AASAAN

Published by Church of Christ

Editor
S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol.14 October 2001 Issue-10

ஆசிரியர் உரை

# "நீங்கள் அவ்வளவு ஞானிகளா?"

இத்தலைப்பைப் பார்த்து விட்டு, தயவுசெய்து என்னைத் தப்பாக நினைத்துக் கொள்ளாதீர்கள். ஞானம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கும், எழுதுகின்ற அளவுக்கும் ஞானம் வந்து விட்டதா என்று என்னைப் பற்றி உங்கள் மனதில் எண்ணியும் விடாதீர்கள். என்னைப்பற்றி அப்படி எண்ணுவது தவறு என்று இங்கே நான் சொல்லவில்லை. மாறாக, ஞானம் பற்றிப் பேசும் தகுதியும், எழுதும் தகுதியும், எனக்கில்லையென்பதை உங்களைப் போன்றே நானும் ஊர்ஜிதமாகவே அறிவேன் என்று தான் சொல்ல வருகிறேன். அத்தோடு, ஏசாயா தீர்க்கனின் ஐந்தாம் அதிகாரத்து, "ஐயோ"க்களையும் நான் நன்கறிவேன். அந்த ஐயோக்களில் ஒன்று இவ்விதம் கூறுகிறது. "தங்கள் பார்வைக்கு ஞானிகளும், தங்கள் எண்ணத்துக்குப் புத்திமான்களுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ" என்று (5:21). இருப்பினும், இத்தலைப்பை மையமாக வைத்து, சில காரியங்களை, வேதாகமத்தின் முழு ஆதாரத்தோடு கற்றுக்கொள்ள முடியுமென்று நான் திட்டமாக நம்பியதால், இத்தலைப்பை தாராளமாய்த் தெரிந்து கொண்டேன்.

நமது தலைப்பில் இடம்பெற்றுள்ள, "அவ்வளவு" என்ற வார்த்தையை நமது அன்றாட வழக்கில், நாம் அவ்வளவாகப் பயன்படுத்துவதில்லை. பயன்படுத்தும் சில சந்தர்ப்பங்களில் கூட, ஒன்றை நேரிடையாகக் குறிப்பிடுவதற்கு இவ்வார்த்தையை நாம் தேடுவதில்லை. மாறாக ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட்டு, அதனடிப்படையில் பேசுவதற்கே, இவ்வார்த்தை பெரும்பாலும் பயன்படும் அல்லது பயன்படுத்தப்படும். ஆகவே, "நீங்கள் அவ்வளவு ஞானிகளா?" என்று நமது தலைப்பு சொல்லும்போது, நம்முடைய ஞானம் வேறு யாருடைய ஞானத்தோடோ ஒப்பிடப்பட்டிருக்கிறதென்பதைச் சொல்லவும் வேண்டியதில்லை.

நமது கரங்களில் உள்ள தமிழ் வேதாகமம், "ஞானி", "ஞானிகள்" என்று சிலரை நேரிடையாகக் குறிப்பிடுகிறது. அவர்களில் பிரதானமானவன் பழைய ஏற்பாட்டில் புகழ்பெற்ற ராஜாவாகத் திகழ்ந்த தாவீதின் குமாரன் சாலமோன். தன் தகப்பனாகிய தாவீதைப் போலவே, இவனும் புகழ் மணம் பரப்பிய ஒரு பிரபல ராஜாதான். ஆனால், "தாவீது ராஜா" என்பது போல், இவன் "சாலமோன் ராஜா" என்று எல்லோராலும் அறியப்படாமல், "சாலமோன் ஞானி" என்றே பெரும்பாலும் அறியப்பட்டு, அழைக்கப்பட்டுள்ளான். அதற்குக் காரணம், அங்கே, "ராஜ மேன்மைக்கும்", "ஞான மேன்மைக்கும்" இடையே நடந்த போட்டியில், ஈடுகொடுக்க முடியாத "ராஜ மேன்மை", "ஞான மேன்மை"க்கு முன்பாக தாழ்ந்து போனது. ஆம், ராஜமேன்மையை குறைவுள்ளதாக்கும் அளவு, சாலமோனின் ஞானம் பெரியது. அவனையொத்த ஞானமுள்ளவன் அவனுக்கு முன் இருந்ததுமில்லை, அவனுக்குப் பின் இருக்கப் போவதுமில்லையென்று, வேதாகமமே சாட்சி பகர்கிறது. (1 ராஜா 3:12). அப்படிப்பட்ட ஞானி சாலமோனுடைய ஞானத்தோடு, நம்முடைய ஞானத்தை ஒப்பிட்டு நான் எதையும் இங்கே சொல்லப் போவதில்லை. ஏனெனில், நம்முடைய ஞானம், அறிவு, புத்தி இவைகளெல்லாம், அந்த மகா ஞானத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதற்கு அருகதையும், லாயக்கும் அற்றவை. ஆகவே அந்தப் பேச்சே வேண்டாம்.

அடுத்து, புதிய ஏற்பாட்டில், தனது இரண்டாவது சுவிசேஷ சுற்றுப் பயணத்தின் போது, அத்தேனே பட்டணத்தில், அறிவு பெருத்தவர்களுக்கும், தனவான்களுக்கும் மாத்திரமே தாரை வார்க்கப்பட்டிருந்த, மார்ஸ் மேடையின் மீது ஏறி நின்று, இரட்சிப்பின் செய்தியைப் பிரசங்கிப்பதற்கு முன்பாக, அப்பட்டணத்தைச் சுற்றி வந்த போது, அங்கே ஞானிகள் என்ற பெயரில் "எப்பிக்கூரர்", "ஸ்தோயிக்கர்" என்ற இரண்டு பிரிவினரை அப்போஸ்தலன் பவுல் கண்டு கொண்டாரே, அவர்களுடைய ஞானத்தோடும், நம்முடைய ஞானத்தை நான் ஒப்பிடப்போவதில்லை. ஏனெனில் அவர்கள் பெற்றிருந்த அந்த ஞானம், அவர்களுக்கு எந்தவொரு ஆன்ம நன்மையையும் செய்யவில்லை. தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாகத் தோன்றக்கூடிய இப்படிப்பட்ட உலக ஞானம் நமக்கு அறவே தேவையில்லை (1கொரி 1:26) ஆன்மவாழ்வுக்கு ஆதரவுக் கரம் நீட்டாத, நித்திய வாழ்வுக்கு வழிநடத்தாத உலக ஞானம் பற்றிப் பேசுவதாலும், எழுதுவதாலும் நமக்குப் பயனேதும் இருக்கப் போவதில்லை. ஆகவே, அந்த ஞானத்தையும், அந்த ஞானிகளையும் நாம் ஒதுக்கித் தள்ளுவோம்.

அப்படியானால், நம்முடைய ஒப்பிடுதல் யாருடன் தான் என்று கேட்கிறீர்கள். அப்படித்தானே? கண்டிப்பாக, நம்முடைய ஒப்பிடுதல் ஞானிகளோடு தான். அவர்கள் மத்தேயு இரண்டாம் அதிகாரத்தில் இடம் பெற்றிருப்பவர்கள். இயேசுவின் பிறப்போடு சம்பந்தப்பட்டவர்கள். ஆம், நம்முடைய

ஆண்டவரும், உலக மீட்பருமாகிய இயேசுவானவர், யூதேயாவிலுள்ள பெத்லகேமில் குழந்தையாகப் பிறந்தபோது, அபூர்வ நட்சத்திரத்தை அடையாளமாகக் கொண்டு, சாஸ்திரிகள் கிழக்கிலிருந்து, அவரைப் பணிந்து கொள்ள வந்தார்கள் என்று அங்கே உள்ளது (மத் 2:12) கிழக்கிலிருந்து வந்த சாஸ்திரிகள் பற்றிப் பல விளக்கங்கள் உண்டு. கிழக்கு என்பது எந்த தேசத்தைக் குறிக்கிறதென்றும், சாஸ்திரிகள் என்பவர்கள் யார் என்றும் மாறுபட்ட கருத்துக்கள் உண்டு. அவை பற்றியெல்லாம் ஆராய்வது நமது இப்போதைய நோக்கமல்ல. ஆயினும், நமது தமிழ் வேதாகமத்தில், அப்பகுதியில், சாஸ்திரிகள் என்று சொல்லப்பட்டிருப்பவர்களுக்கு, ஞானிகள் என்ற பொருளும் இருப்பதால், அந்த ஞானிகளை இப்பொழுது நாம் தெரிந்து கொண்டு, அவர்களின் செயல்பாடு பற்றி அலசிப் பார்த்து, அவர்களின் செயல்பாட்டோடு நமது செயல்பாட்டை ஒப்பிட்டுப் பார்த்து, நமக்குப் பயன்படும் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முயற்சிப்போம்.

## I. ஞானிகள், கேட்பதைக் கேவலமாக நினைக்கவில்லை (வ.2)

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும் முதல்பாடம், தெரியாததைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒருவன் வெட்கப்படக் கூடாது என்பது.

மத் 2:1-2, வசனங்களைக் கவனியுங்கள். "ஏரோது ராஜாவின் நாட்களில், யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபோது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, **யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே?** கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள்".

வேதாகமத்தால் ஞானிகள் என்று சொல்லப்பட்டுள்ள இவர்கள், பண்டைய மேதியா, பெர்சியாவைச் சேர்ந்த ஆசாரிய வம்சத்தார் என்று பெரும்பாலும் நம்பப்படுகிறது. இவர்கள் வானசாஸ்திரம், ஜோஸ்யம், மருத்துவம், இயற்கை ஆராய்ச்சி போன்றவற்றில் நிபுணத்துவம் பெற்றிருந்தவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அக்கால கட்டத்தில், இவர்கள் அநேகரால் அறியப்பட்டு, சமுதாயத்தின் மரியாதைக்கு உரியவர்களாக இருந்துள்ளார்கள். காரியங்களின் தன்மையைத் தெரிந்து கொள்ளவும், அவைகளின் விஷயங்களைப் புரிந்து கொள்ளவும், மற்றவர்கள் தான் இவர்களிடத்திலே வர வேண்டுமேயொழிய, இவர்கள் யாரிடத்திலும் போகவேண்டிய அவசியமிருக்காது. இப்படிப்பட்ட ஒரு கூட்டத்தாருக்குத் தான் தானியேல் ஒரு சமயம், பாபிலோன் தேசத்தில் அதிகாரியாக நியமிக்கப்பட்டான். ( தானி.2:48)

ஆனால், இப்படி சிறப்புக்கள் பல பெற்ற ஞானிகளே, இயேசுவைத் தேடும் தங்கள் முயற்சியின் ஒரு கட்டத்தில், "யூதருக்கு ராஜவாகப் பிறந்திருக்கிறவர்

எங்கே?" என்று பிறரிடத்தில் கேட்டுள்ளார்கள். இங்கே நாம் கவனிக்க வேண்டியது யாதெனில், எதையும் யாரிடத்திலும் கேட்க வேண்டிய அவசியமில்லாத நிலையிலிருந்த அந்த ஞானிகள், இயேசுவின் காரியம் என்று வரும்போது, மற்றவர்களிடத்தில் கேட்பது தங்கள் தகுதிக்குக் குறைவானதென்று நினைக்காமல், கேட்பதற்கு வெட்கப்படாமல் கேட்டுத் தெரிந்து கொண்டனர் என்பதுதான்.

அன்பானவர்களே, இந்த ஞானிகளின் நிலையோடு நம்முடைய நிலையைச் சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம். இன்றைய கிறிஸ்தவ உலகமும், நாமும் அந்த ஞானிகளைப் போல் செயல்பட்டுக் கொண்டுள்ளோமா? இயேசுவின் காரியமாக நமக்குத் தெரியாதவைகள், விளங்காதவைகள் என்று வரும்போது, தெரிந்தவர்களிடத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் உடையவர்களாக இருக்கிறோமா? சொல்லுங்கள். அப்படியில்லையென்றால், நாம் அந்த ஞானிகளைக் காட்டிலும் நம்மை ஞானிகளாக நினைத்துக் கொண்டிருக்கிறோம் என்று தானே பொருள்.

தேவ வசனங்களால் ஞானிகள் என்று சாட்சியிடப்பட்டு, அன்றைய உலகத்தால், தங்கள் ஞானத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றவர்களே, தங்களுக்குத் தெரியாதவைகளைத் தெரிந்து கொள்ள, பிறர் உதவியை நாடின போது, நாம் ஏன் தேவ இரகசியங்களை அறிந்து கொள்ள, தேவ வசனங்களின் சரியான விளக்கங்களைத் தெரிந்து கொள்ள கௌரவம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்? கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்ளுகின்ற அநேகர், அதே கிறிஸ்துவின், காரியமாக, போலி கௌரவம் பார்த்துக் கொண்டுள்ளார்கள் என்பது எவ்வளவு பரிதாபமானது தெரியுமா? என்னுடைய தகுதிக்கும், என்னுடைய படிப்பிற்கும், என்னுடைய பாரம்பரியத்திற்கும், நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து வேதாகமத்தைப் படிப்பது? நான் எப்படி அவர்கள் சொல்லுவதை ஏற்றுக் கொள்வது! நான் எப்படி அவர்களுடன் சேர்ந்து ஆராதிப்பது? என்றெல்லாம் அநேகர் தங்களுக்குள்ளே கேள்விகளை எழுப்பி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டுள்ளார்கள். இதுதான் இன்றைய கிறிஸ்தவர்களின் உண்மை நிலை ஒருவேளை ஞானிகள் அப்படி எண்ணியிருந்தால், அவர்களால் இயேசுவைக் கண்டிருக்க முடியுமா? ஞானிகளே, வெட்கப்படாதபோது, நமக்கு எதற்கு வெட்கம்? ஞானிகளே கேட்பதைக் கேவலமாக நினைக்காத போது, நாம் ஏன் அப்படி நினைக்க வேண்டும்? அந்த ஞானிகளிலும் நாம் மேலானவர்களா?

கேட்பது நன்மையானது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம் அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் உள்ளது. அங்கே, எத்தியோப்பிய மந்திரி தனது பக்திப் பயணத்தை முடித்து ஊர் திரும்பும்போது, வழியிலே தேவ ஊழியக்காரன் பிலிப்புவைச் சந்திக்க நேர்ந்தது ( அப் 8:28). தயவு செய்து அந்த சந்திப்பைக் கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள். ஒருவன் நிதி மந்திரி மற்றவன்

சாதாரண மனிதன். நிதி மந்திரி மெத்தப்படித்தவன், பிலிப்பு அந்தளவு படிக்காதவன், நிதி மந்திரி எடுப்பான தோற்றம் கொண்டவன். பிலிப்பு சராசரி மனிதனுக்குரிய தோற்றமுடையவன். நிதி மந்திரி இரதப் பயணம். பிலிப்பு கால் நடைக்காரன், கவனித்துப்பார்த்தால் எல்லா வகையிலுமே இருவருக்குமிடையே பெருத்த வித்தியாசம். நிதி மந்திரி இந்தப் பிலிப்புவை ஏறெடுத்துக் கூடப் பார்த்திருக்கத் தேவையில்லை. ஆனால் நடந்த சந்திப்பின் போது, அப்பேர்ப்பட்ட எத்தியோப்பியா மந்திரியே "நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா? என்ற பிலிப்புவின் கேள்விக்கு, "ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டு, பிலிப்புவைத் தன்னிடமாகச் சேர்த்துக் கொண்டு, வேதவாக்கியங்களின் சரியான அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு, இறுதியிலே பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான் (அப் 8-30-39) என்று.

ஆகவே தேவனுக்கடுத்த காரியங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு, ஒருபோதும், வெட்கப்படாமல், கௌரவம் பார்க்காமல் கேட்போம். கேட்பதின் மூலம், இயேசுவையும், அவர்தம் இரட்சிப் பின் திட்டத்தையும், அவர் கட்டின ஒன்றான மெய் சபையையும் தெரிந்து கொள்வோம்.

## II. "ஞானிகள் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிந்தார்கள் (வ.12)

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும் இரண்டாவது பாடம், ஒருவன் தேவனுடைய சத்தத்திற்கு மாத்திரம் கீழ்ப்படிய வேண்டுமென்பது.

இயேசுவாகிய பிள்ளையினிமித்தம் கலக்கமுற்ற ஏரோது, தனது ஸ்தானத்திற்கு ஆபத்து வந்துவிட்டதென்று பயந்து, இயேசுவாகிய குழந்தையைக் கொன்றுபோட வஞ்ச எண்ணங்கொண்டு, ஞானிகளிடத்தில் தந்திரமாய்ப் பேசி, "நீங்கள் போய்ப் பிள்ளையைக் குறித்துத் திட்டமாய் விசாரியுங்கள். நீங்கள் அதைக் கண்ட பின்பு, நானும் வந்து அதைப் பணிந்து கொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களை பெத்லகேமுக்கு அனுப்பினான்" (வ.8) ஆனால். 12ம் வசனம், பின்பு அவர்கள் ஏரோதினிடத்திற்கு திரும்பிப் போக வேண்டாமென்று சொப்பனத்தில் **தேவனால் எச்சரிக்கப்பட்டு,** வேறுவழியாய் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்" என்று சொல்கிறது.

இந்த இரண்டு வசனங்களிலிருந்து, நாம் தெரிந்து கொள்வது என்ன? ஞானிகள் யாருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்தார்கள்? அங்கே, ஞானிகளுக்கு முன்பாக, இரண்டு பேருடைய வார்த்தைகள் வைக்கப்பட்டுள்ளது. ஒன்று, "எனக்கும் வந்து அறிவியுங்கள்" என்ற ஏரோது ராஜாவின் வார்த்தை. மற்றொன்று, "ஏரோதினிடத்தில் திரும்பிப் போக வேண்டாம்" என்ற ராஜாதி ராஜாவின் வார்த்தை. ஞானிகள் யாருடைய வார்த்தைகளைத் தெரிந்து கொண்டார்கள். சொல்லுங்கள் ராஜாதி ராஜவாகிய தேவனுடைய வார்த்தைகளைத் தான்.

அருமையானவர்களே நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், இயேசுவுக்கும் அவர்தம் இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த சபைக்கும் (அப் 20;28) அடுத்த காரியத்தில், நாம் யாருடைய வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து கொண்டுள்ளோம்? மனிதனுடைய வார்த்தைகளுக்கா? அல்லது தேவனுடைய வார்த்தைகளுக்கா? மனித கொள்கை, கோட்பாடுகளுக்கா அல்லது தேவ வெளிப்பாட்டுக்கா? மனித உபதேசங்களுக்கா அல்லது தேவ வசனங்களுக்கா? மனிதனைப் பிரியப்படுத்துகிறவர்களாக உள்ளோமா அல்லது தேவனைப் பின்பற்றுகிறவர்களாக உள்ளோமா? சொல்லுங்கள், "நாம் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" கலா 1:10) என்ற வசனம் உங்களுக்குத் தெரியுமா?

அந்த ஞானிகள், அந்நாட்களில் சர்வ அதிகாரமும் கொண்ட ஏரோது ராஜாவின்வார்த்தகளுக்கு கீழ்படியாமல் தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, நம்முடைய ஆன்மாவின் மீது, ஒரு அதிகாரமும் இல்லாத மதத் தலைவர்களின் வார்த்தைகளுக்கு நாம் பவ்வியமாகக் கட்டுப்பட்டு, தேவனுடைய வார்த்தைகளை ஏன் மீறி நடக்க வேண்டும்? இந்த மதத் தலைவர்களும், மார்க்க முன்னோடிகளும், குறிப்பாக இன்று வரம் பெற்றவர்கள் என்று தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்பவர்களும் "குருடனுக்குக் குருடன் வழிகாட்டுதல்" போன்றல்லவா ஜனங்களை நடத்திக் கொண்டுள்ளார்கள்! இயேசுவின் நாட்களில் இருந்த நிலை இன்றும் நீடித்துக் கொண்டுதானே உள்ளது. (மத் 15;14) "**இயேசுவுக்குச் செவிகொடுங்கள்**" என்று மறுரூபமலையிலே அறிவிக்கப்பட்டு (மத் 17;5), அந்த இயேசுவைக் கொண்டு, புதிய ஏற்பாட்டை, தேவன் கொடுத்திருக்கும் போது, அந்தப் புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளுக்குப் புறம்பாக, இந்த மதத் தலைவர்கள், ஆளாளுக்கு கொள்கைப் புத்தகங்களை உருவாக்கிக் கொண்டு அதனடிப்படையில் ஒரு கூட்டத்தையும் சேர்த்துக் கொண்டு, வழி நடத்திக் கொண்டுள்ளார்களே, பின்னே இவர்களெல்லாரும் குருடரான வழிகாட்டிகளில்லையா? புதிய ஏற்பாட்டின், "**இரட்சிப்பின் திட்டம்**" அவர்களுடைய கொள்கைப் புத்தகங்களில் எங்கே இருக்கிறது? காட்டுங்கள் பார்க்கலாம்!

அருமையானவர்களே, இந்த வேஷதாரிகளின் வார்த்தைகளுக்கு நீங்கள் ஏன் இன்னும் கட்டுப்பட்டு நடக்கிறீர்கள்? அந்த ஞானிகள் என்ன செய்தார்கள்? ஏரோது ராஜாவா? தேவாதி தேவனா? என்ற நிலை வந்த போது, யார் பக்கம் நின்றார்கள்? சொல்லுங்கள். இப்பொழுது தேவ வெளிப்பாடா? அல்லது மனித ஏற்பாடா? என்று வரும்போது, நீங்கள் யார் பக்கம் நிற்கப் போகிறீர்கள்? நீங்கள் மனிதர்பக்கம் நிற்கிறவர்களாயிருந்தால் நீங்கள் அந்த ஞானிகளிலும் ஞானிகளா? ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக, நிறுத்தப்பட்டு. மிரட்டப்பட்ட நிலையிலும், பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும், "மனிஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே

அவசியமாயிருக்கிறது". என்று சொல்லியுள்ளார்களென்பது தெரியுந் தானே! (அப் 5;29)

ஆகவே, அந்த ஞானிகளைப் போலும், நமது அப்போஸ்தலர் போலும் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் மாத்திரமே கீழ்ப்படிகிறவர்களாக நாம் ஒவ்வொருவரும் இருப்போம்.

**III ஞானிகள் இயேசுவைப் பணிந்து கொடுத்து, தங்கள் பக்தியை வெளிப்படுத்தினார்கள். (வ.11)**

சாஸ்திரிகளாகிய ஞானிகள் நமக்குக் கற்றுத் தரும், இன்னுமொரு பாடம் ஒருவன் தன்னையும், தன்னிடத்திலிருப்பதையும் தேவனுக்குக் கொடுக்க வேண்டுமென்பது.

"அவர்கள் (ஞானிகள்) அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து, அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும் தூப வர்க்கத்தையும், வெள்ளைப் போலத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள்" (மத் 2:11) என்று வசனம் சொல்கிறது.

இந்த வசனம், அவர்கள் இரண்டு காரியங்கள் செய்ததாக நமக்குக் கூறுகிறது. ஒன்று, அவர்கள் இயேசுவைப் பணிந்து கொண்டது". (பணிந்து என்பதற்கு ஆங்கில வேதாகமத்தில் ஆராதித்தார்கள் என்றுள்ளது) மற்றொன்று இயேசுவுக்குக் கொடுத்து" இந்த ஞானிகள் புறஜாதியார், இயேசுவின் தெய்வீகத்தை இவர்கள் முறையாக அறிந்திருக்க நியாயமில்லை. ஆனால் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கொஞ்ச காரியமே, அவர்கள் கண்டுகொண்ட சிறிதளவு காரியமே அவர்கள் அவரைப் பணிந்து, ஆராதிக்கும் படியாகச் செய்துள்ளது. ஆனால், இன்றைக்கு இயேசுபற்றியும், அவருடைய தெய்வீகம் பற்றியும், அதன் நோக்கம் பற்றியும், அவருடைய உபதேசம் பற்றியும், அவருடைய சிலுவை மரணம் பற்றியும், அதன் நோக்கம் பற்றியும், அவர் உயிர்த்தெழுதல் பற்றியும், அவருடைய சபை பற்றியும், அதற்குள் வரவேண்டிய அவசியம் பற்றியும்,அவருடைய இரண்டாம் வருகை பற்றியும், அதற்குப் பிறகான நியாயத் தீர்ப்பு பற்றியும் அதிகதிகமாய் அறிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றிருக்கும் நாம். அவரைப் பணிந்து கொள்கின்ற விஷயத்தில், அவரை ஆராதிக்கின்ற காரியத்தில் எந்தளவு நாம் உண்மையாய் உள்ளோம். தயவு செய்து சிந்தியுங்கள்.

ஒருவேளை நான் தவறாமல் ஆராதிக்கிறேன்" என்பது உங்களது பதிலாக இருக்குமானால், வேத வசனம் சொல்லுகிறபடி, " ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறீர்களா?" (யோவா 4:29) என்பதையும் உறுதிசெய்து கொள்ளுங்கள். "ஆவியோடும் என்பது ஆராதிப்பவர்களின் நேர்மையான மனநிலையையும், "உண்மையோடும் என்பது, ஆராதிக்க வேண்டிய

முறைபற்றியும் வசனத்தின் வழிகாட்டுதலையும் குறிப்பதாகும் (கொலே 3;17) ஆகவே, தேவனுக்காக நீங்கள் ஏறெடுக்கும் ஆராதனையில், இருக்க வேண்டிய ஐந்து பங்குகளும், அதாவது பாடல் (எபே. 5: 19) ஜெபம் (அப். 2: 42), வேதம் வாசித்தல் அல்லது போதித்தல் (1.பேதுரு4: 11) கர்த்தரின் பந்தி (மத்.26: 28) கொடுத்தல் (1கொரி. 16: 1,2) இருக்கிறதா என்று நிச்சயித்துக் கொள்ளுங்கள். உங்களின் ஒவ்வொரு ஞாயிறு ஆராதானைகளிலும், இவைகள் இல்லையானால் உங்கள் ஆராதனை உண்மையான ஆராதனையாக இருக்க முடியாது.

அடுத்து ஞானிகள் இயேசுவுக்கு சிறந்ததையே காணிக்கையாகக் கொடுத்துள்ளார்கள். “பொன், தூபவர்க்கம், வெள்ளைப்போலம், என்று உசிதமான பொருள்களைக் கொடுத்துள்ளார்கள். தேனுடைய உண்மைப் பிள்ளையாயிருந்து, அவரை ஆராதிக்கும் நாம் ஒவ்வொருவரும், நம்முடைய இருதயத்தையும், ஆத்துமாவையும் அவருக்குக் கொடுக்கிறது போல, அவருடைய காரியங்களை மதித்து அவர்தம், கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு, உற்சாகமாய், சிறந்ததைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளோம். இன்னும் அவரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் நன்மைகளுக்கு நன்றி சொல்லும்படியாகவும் நாம் கொடுக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லுவதைப்பாருங்கள், “கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னதைச் செலுத்துவேன்? (சங் 116;12) பவுலடியார், கொரிந்தியருக்குச் சொல்லும் போது, “இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைச் சோதிக்கும் பொருட்டே சொல்லுகிறேன்.” என்கிறார் (1 கொரி 8:8) பரலோகத்தின் தேவன், **தம்முடைய ஒரே பேரான குமாரனையே நமக்காகக் கொடுத்தார்.** அதை ஒரு கணம் சிந்தித்தால், நமது கொடுத்தல் எவ்வளவு சிறப்பானதாக இருக்க வேண்டுமென்பது, நன்றாகவே விளங்கும் ஆகவே சிறந்ததையே எப்போதும் தேவனுக்கு கொடுக்க கூடியவர்களாக இருப்போம். சிறந்ததை உற்சாகமாய்க் கொடுப்பதின் மூலம், நமது கணக்குக்குத்தான் பலன் பெருகுகிறது என்பதை உணர்ந்து கொடுப்போம். (பிலி. 4:17)

எனக்கன்பானவர்களே, ஞானிகளேடு, நம்முடைய வாழ்வை ஒப்பிட்டுப் பார்க்கும்படியான வாய்ப்பை நாம் பெற்றோம். இந்த ஞானிகளைப் போல நமது செயல்பாடும் இருக்குமானால், நாமும் அவர்களைப் போல ஞானிகளாக இருக்க முடியும். இல்லையேல், இப்பூமியில் மிஞ்சின ஞானிகளாகத் திகழ்ந்து, நித்தியத்தை இழந்து போகும் நிலை ஏற்படும். நம் யாருக்கும் அப்படிப்பட்ட நிலை ஏற்பட வேண்டாம். நாம் ஒவ்வொருவரும் சாஸ்திரிகளைப் போன்றே ஞானமுள்ளவர்களாய் இருப்போம். அப்படிப்பட்ட ஞானத்தைப் பரலோகத்தின் தேவன் நமக்குத் தந்தருளுவாராக! ஆமென்.

**S. ராஜநாயகம்**

*ஜெபியுங்கள்!* *திட்டமிடுங்கள்!* *பங்குபெறுங்கள்!*



**காங்கேயம் கிறிஸ்துவின் சபையாரும்**

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரியும்**

இணைந்து நடத்தும்

# நான்காம் வேதாகம கருத்தரங்கம்

**(FOURTH ANNUAL BIBLE LECTURESHIP)**

நாள் : ***அக்டோபர் 25,26 - 2001***

***வியாழன், வெள்ளி (அரசு விடுமுறை நாட்கள்)***

நேரம் : ***தினமும் காலை 9.00 - 12.30 மணி வரை***

***மாலை 2.00 - 5.00 மணி வரை***

இடம் : ***கிறிஸ்துவின் சபை வளாகம்***

தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

**பேச்சாளர்கள் :** ***தெரிந்தெடுக்கப்பட்ட தேவதாசர்கள்***

வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்

**பதிவுக்கட்டணம் ரூ. 25/- மட்டுமே**

தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனி இடவசதி உண்டு.

*தொடர்பு முகவரி :*

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கேயம் - 638 701.

போன் : 04257 - 30030

# சிலுவையில் தொங்கிய கள்ளன்

முழு வேதாகமத்திலும் பிரசித்தியாய் பேசப்படுகிற நபர்களில் ஒருவன் சிலுவையில் தொங்கிய கள்ளன். மத உலகில் இருப்போரில் சிலர், விசேஷமாக ஞானஸ்நானம் ஒருவரின் ஆத்துமாவுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறது, என்பதை மறுப்போர், சிலுவையில் தொங்கிய கள்ளனுடன் தங்களை இணைத்துக் கொள்ள விரும்புகின்றனர். ஞானஸ்நானம் அவசியமில்லை என்று எப்படியாகிலும் நிரூபிக்க சிலுவையில் தொங்கிய கள்ளனைச் சுட்டிக்காட்டி, அடிக்கடிக் கேட்கும் கேள்வி,

"சிலுவையில் தொங்கிய கள்ளனைப்பற்றி என்ன?" என்பது தான்

"கர்த்தர் என்ன சொன்னார்?" என்று யாரும் கேட்பதில்லை. ஆனால் "ஞானஸ்நானமின்றி கள்ளன் இரட்சிக்கப்படவில்லையா?" என்று கேட்கின்றனர். உண்மையில் வருத்தமென்னவெனில், புதிய உடன்படிக்கையில் காணப்படாத உபதேசத்தை இவர்கள் நிரூபிக்க முயற்சிப்பதுதான். வேறு வழியின்றி, பதில் கொடுக்க வகையின்றி, தர்க்கம் பண்ண ஏதுவின்றி போகும் சூழ்நிலை உருவாகும்போது, அவர்கள் சிலுவையில் தொங்கிய கள்ளனுக்குப் பின்னால் போகத் துணிகின்றனர். தனது செயலை நிரூபிக்க ஒரு கள்ளனைத் தெரிந்து கொள்ள விரும்பும் நபர்களை என்னவென்பது.

சிலுவையில் தொங்கிய கள்ளன் ஞானஸ்நானமின்றி இரட்சிக்கப்பட்டான் என்று நிரூபிக்க முயலுவோர், அநேக காரியங்களை மேலோட்டமா எடுத்துக் கொள்கின்றனர்.

1. கள்ளன் ஞானஸ்நானம் பெற்றதையோ, பெறாததையோ யாராலும் நிரூபிக்க இயலாது. "அப்பொழுது, எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்தில் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்." என்று பதிவேடு கூறுகிறது. (மத்தேயு 3:5,6) ஆதலால், யோவானால் ஞானஸ்நானம் பெற்றவர்களில் கள்ளனும் ஒருவனாக இருந்திருக்கலாம். ஆகிலும் அவன் கள்ளனாயிற்றே என்று யாராவது கேட்கலாம். அது சரியே, ஆனாலும் ஞானஸ்நானம் பெற்றவர்களில் சிலர் திருடர்களாக மாறியதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். ஆனால் நமது கருத்து என்னவெனில், கள்ளன்

ஞானஸ்நாமில்லாமல் இரட்சிக்கப்பட்டான் என்பதை ஆலோசனையாகக் கூறி, இன்று மக்கள் இரட்சிக்கப்பட ஞானஸ்நானம் தேவையற்றது என்று கூறிவிடமுடியாது.

2. சிலுவையில் தொங்கிய கள்ளன் மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவன். அந்த பிரமாணத்தின் கீழ் அநேகரை கிறிஸ்து மன்னித்தார். அப்படிச் செய்ய அவருக்கு அதிகாரமிருந்தது. எனவே இதனடிப்படையில் கள்ளன் இரட்சிக்கப்பட்டானா இல்லையா என்று நான் வாதிடப் போவதில்லை. கேள்வி அதுவல்ல கேள்வி என்னவெனில் அவன் எந்தப் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவன்? என்பதுதான்.

3. கள்ளன் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் முன்பாக வாழ்ந்தவன். கள்ளன் அவரிடத்தில் தனக்கு இடம் கேட்கும்போது. கிறிஸ்து இன்னும் உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கவில்லை. எனவே ஒருவர் தான் எப்படி இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்கு சிலுவையில் தொங்கிய கள்ளனை எப்படி உதாரணமாக்க முடியும்?

4. கிறிஸ்து சிலுவையில் மரித்தபொழுது, புதிய ஏற்பாட்டை தமது இரத்தத்தினாலே முத்தரித்தார். "எப்படியெனில், மரணமுண்டான பின்பே மரண சாதனம் உறுதிப்படும்; அதை எழுதினவன் உயிரோடிருக்கையிலே அதற்குப் பெலனில்லையே". (எபிரேயர் 9:27). எனவே சிலுவை மரணத்திற்கு முன் கிறிஸ்து, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று தமது எளிமையான வார்த்தையின் மூலம் பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றிருந்தார். அவர் மரித்தபொழுதோ அவரது சாசனம் (உயில்) அமுலுக்கு வந்தது. கள்ளனுக்கு ஒரு காரியத்தை சொன்ன கிறிஸ்து, அப்போஸ்தலர்களிடத்திலே கூறும்போது, "நீங்கள் உலகமெங்கும் போய் சருவசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16). இதை எப்பொழுது சொன்னார்? அவருடைய மரணத்திற்கு முன்பாகவா? மரணத்திற்கு பின்பாகவா? மரணத்திற்குப் பின்பாகத்தான். அப்படியானால் அப்போஸ்தலர்கள் எதைப் பிரசங்கித்தனர்? கர்த்தர் தங்களுக்கு எதைப் பிரசங்கிக்க சொன்னாரோ அதையே பிரசங்கம் பண்ணிணார்கள். இரட்சிக்கப்படுவதற்கு சிலுவையில் தொங்கிய கள்ளனை உதாரணப்படுத்தி ஒரு முறைகூட அவர்கள் பிரசங்கிக்கவில்லை. ஆனால் அப்போஸ்தலர்

நடபடிகளில் கூறப்படுகிற மனமாற்ற நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும், கிறிஸ்து தங்களுக்குக் கட்டளையிட்டவைகளையே பிரசங்கித்ததாகக் காணுகிறோம். இதன் விளைவாக மக்கள் விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பண்ணப்பட்டதாகக் காண்கிறோம்.

5. கிறிஸ்துவின் சாசனம் (உயில்) மீறப்படவோ, மாற்றியமைக்கப்படவோ கூடாதது. அதில் கிறிஸ்து எதைச் சேர்த்துள்ளாரோ அது அப்படியே அவருடைய இரத்தத்தினால் முத்தரிக்கப்பட வேண்டும். (வெளிப்படுத்தின விசேஷம் 22:18,19) கலாத்தியர் 1:6-9.

6. கிறிஸ்துவின் சாசனம் எளிமையாகவும், தெளிவானதாகவும் இருக்கிறது. அதைப் புரிந்து கொள்ள விரும்புகிற யாரும் புரிந்து கொள்ளலாம். அதைத் தவறாகப் புரிந்து கொள்ள சிலரின் உதவியை நாடுகின்றனர்.

7. மரணப்படுக்கையில் இரட்சிப்பு என சிலுவையில் தொங்கிய கள்ளனைக் கொண்டு நியாயப்படுத்தக் கூடாது. கள்ளன், அவன் வாழ்ந்த பழைய பிரமாணத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுவான், நீங்களும் நானும் கிறிஸ்துவின் பிரமாணத்தின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுகிறோம். ஞானஸ்நானமில்லாமலேயே, ஏதோ ஒரு கட்டுக்கதையைக் கொண்டு இப்படியும் அப்படியும் இரட்சிக்கப்படலாம் என்று கூறி வருவது வருந்தத்தக்கது. ஆகிலும், அதற்கு வேதாகமத்தில் ஒரு உதாரணமாகிலும் இல்லை. நமக்குத் தெரிந்தவரையில் கர்த்தர் சொன்னார். இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறார். "விசுவாமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" என்று (மாற்கு 16:16) நான் வேதாகமத்தை அதிகமாக படித்திருக்கிறேன், மேற்குறிப்பிட்டவர்களுக்கு அப்படி எதுவும் விதிவிலக்கு அளிக்கப்பட்டதாக நான் காணவில்லை. கர்த்தர் சொன்னவற்றை மாத்திரம் மனிதன் கஷ்டப்பட்டு செயல்படுத்துவானானால், கர்த்தர் சொன்ன விதிகளின்படி செயல்படுகின்ற அனைவரும் இரட்சிக்கப்படுவர். ஞானஸ்நானம் 'மட்டுமே' இரட்சிக்காது. மாறாக, கர்த்தர் ஒருவர் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதில் விசுவாசம், மனந்திரும்புதல் எப்படித் தேவைப்படுகிறதோ அப்படியே ஞானஸ்நானமும் தேவையானது. அவ்வளவுதான்.

J.C.Choate J.C.சோட்

# "தன் குடும்பத்தை உபசரிப்பதில் ஒரு பெண்ணின் பங்கு"

"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதனால் சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு" (எபி 13:2). ஆரம்ப காலத்திலிருந்தே இந்த விருந்தோம்பல் என்பது ஒரு கனத்திற்குரிய மற்றும் தன்னலமற்ற குணாதிசயமாக கருதப்படுகிறது.

ஒருநாள், ஆபிரகாம் வசித்து வந்த கூடாரத்தின் வழியாக மூன்று மனிதர்கள் கடந்து சென்றார்கள். ஆபிரகாம், அவர்களிடத்தில் ஓடி அவர்களை தன் கூடாரத்தின் அருகில் இருக்கும் மரத்தின் நிழலில் ஓய்வு எடுத்துச்செல்லும்படி மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டான். பின்பு அவன், சாராளிடம் அவர்களுக்கு அப்பம் தயாரிக்குமாறு துரிதப்படுத்தினான். பின்பு, தானே, தன் மந்தைக்குள் சென்று ஓர் இளங்கன்றைத் தேர்ந்தெடுத்து அதை தன் வேலைக்காரரிடம் கொடுத்து சமைக்கும்படி கேட்டுக் கொண்டான். வெண்ணையையும், பாலையும் எடுத்துக் கொண்டு, தான் அழைத்தவர்கள் சாப்பிடும் வரை, அவர்கள் அருகே மரத்தின் நிழலில் நின்றுகொண்டிருந்தான். (ஆதி 18ம் அதிகாரம்)

அந்த முக்கியமான நாளில், ஆபிரகாம், மனித உருவத்திலிருந்த கர்த்தருக்கும், இரண்டு தேவதூதர்களுக்கும் விருந்தளிப்பவனாக மாறினான். (ஆதி 18:13, 19:1). நீண்ட நாளுக்கு முன் வாழ்ந்த அந்த ஆபிரகாம், சாராள் ஆகிய இருவரிடமும் இருந்த உபசரணை நிறைந்த இருதயத்தை புதிய ஏற்பாட்டு, கிறிஸ்தவர்களும் பெற்றிருக்க வேண்டுமென எபிரேய ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

மற்றொரு சமயத்தில் தேவனுடைய தீர்க்கதரிசியான எலிசா, " ..... சூனேமுக்குப் போயிருக்கும்போது, அங்கேயிருந்த கனம்பொருந்திய ஒரு ஸ்திரீ அவனை போஜனம் பண்ண வருந்திக் கேட்டுக் கொண்டாள். அப்படியே அவன் பயணப்பட்டு வருகிறபோதெல்லாம் போஜனம் பண்ணும்படி அங்கே வந்து தங்குவான். அவள் தன் புருஷனை நோக்கி, "இதோ, நம்மிடத்தில் எப்போதும் வந்துபோகிற தேவனுடைய மனுஷனாகிய இவர் பரிசுத்தவான் என்று காண்கிறேன். நாம் மெத்தையின்மேல் ஒரு சிறிய அறைவீட்டைக்கட்டி, அதில்

அவருக்கு ஒரு கட்டிலையும், மேஜையையும், நாற்காலியையும், குத்துவிளக்கையும் வைப்போம். அவர் நம்மிடத்தில் வரும்போது அங்கே தங்கலாம் என்றாள்." (2இராஜா 4:8-10). வேலையும் நடந்து முடிந்தது. எலிசாவும், அவன் ஊழியக்காரனாகிய கேயாசியும் எப்பொழுதெல்லாம் அவ்வழியில் கடந்து போனார்களோ அப்பொழுதெல்லாம் இந்த மேல் அறையில் தங்கினார்கள்.

தீர்க்கதரிசியாக இருக்கும் எலிசாவின் வாழ்க்கை, அவ்வளவு சுலபமானதல்ல. இந்த சூனேமியாள் அவனுடைய சரீரத் தேவைகள் சந்திக்கப்படாதிருந்ததை உணர்ந்தாள். பாகாலின் ஆசாரியர்கள் மூலமாகவும், இஸ்ரவேலின் அரசியல் பகைவர் மூலமாகவும், அவனுடைய வாழ்க்கையில் இருக்கும் அபாயத்தையும் சிரியாவின் ராஜா அவனை கொல்ல எத்தணித்துக் கொண்டிருந்ததையும் ஒருவேளை இந்த சூனேமியாள் அறிந்திருப்பாள் போலும். (2 ராஜா 6:1-23).

ஆனால், அன்பான சூனேமியாளின் இருதயம், எலிசாவின் துன்பவேளையை சற்று சுலபமாக்கும்படியாக இருந்தது. எலிசா தீர்க்கதரிசி அவ்வழியே கடந்து செல்லும்போதெல்லாம், அவனுக்கு உணவு தயார் செய்து கொடுத்திலிருந்தும், அவனுடைய வசதிக்கேற்ற அவனுக்காக ஒரு அறையைக் கட்டி அதற்காக செல்வு செய்ததிலிருந்தும் நாம் அவருடைய உபசரிப்புத் தன்மையை காணமுடியும்.

இந்த சூனேமியாள் தேவனுக்கு பயப்படுபவளும், உபசரிப்பதில் சிறந்தவளுமாத்திரமல்ல, ராஜாக்களின் புஸ்தகத்தை எழுதிய ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு அவளைப் பற்றிக் குறிப்பிடும்போது "விசேஷித்தவள்" அல்லது "கனம் பொருந்தியவள்" என்று விமர்சிக்கிறார். எவ்வளவு பாராட்டுதற்குரிய வார்த்தைகள் பாருங்கள்! அவளை வர்ணிக்கிற இந்த அரிய குணங்களை, இன்றைக்கும் தேவனு-டைய குடும்பத்தில் அங்கமாக இருக்கும் ஒவ்வொரு பெண்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த சூனேமியாளிடமிருந்து இன்னும் நாம் என்ன குணங்களை கற்றுக் கொள்ள முடியும்? அவர் ஒரு பணிவுள்ள ஸ்திரீ. அவள் செய்த மகா உதவிக்கு என்ன கைம்மாறு செய்ய வேண்டும் என்று கேட்கும்படி அவளை எலிசா அழைத்தனுப்பிய போது அவனுடைய தனிமையான அந்த அறைக்குள் செல்லவேண்டும் என்று அவள் எண்ணம் கொள்ளவில்லை. 2 ராஜா 4:15 இதைப்பற்றிக் கூறும்போது, "அவளை கூப்பிட்டபோது அவள் வந்து வாசற்படியிலே நின்றாள்". என்ன ஒரு பணிவும், ஞானமும் அவள் குணத்தில் உள்ளது என்று பாருங்கள்!

மேலும், தேவன் மீது அபார நம்பிக்கையையும் தேவனுடைய மனிதனாகிய எலிசாவின் வார்த்தையின் வல்லமையையும்

நாம் இங்கு காண்கிறோம். எலிசா தீர்க்கதரிசனம் சொன்னதின் படியாக -வே அவளுக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டான். (2 ராஜா 4:17). ஆனால் காலப்போக்கில் அவன் திடீரென்று வியாதிப்பட்டு, மரித்துப் போனான். இந்த சூனேமியாள் என்ன செய்தாள்? தனக்கு வந்த துயரத்தை நினைத்து அழுது புலம்பினாளா? இல்லை. எதிர் பாராமல், தீடீரென்று தேவனுடைய மனிதனை சந்திக்க நீ ஏன் பிரயாணப்படுகிறாய் என்று அவள் கணவனே கேட்டபொழுது, அவள் சர்வ சாதாணமாக "எல்லாம் சரி தான்" (2 முடைபே 4:23) என்று பதில் தந்தாள். அவள் மிகப் பெரிய விசுவாமுள்ள ஒரு ஸ்திரீயாக இருந்தாள்.

இன்றைக்கும் கிறிஸ்தவப் பெண்கள் மத்தியில், தெய்வீகமான வாழ்க்கையின் வல்லமை, நம்மை சுற்றி இருப்பவர்கள் மத்தியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. மற்றவர்கள் நம்மிட முள்ள உபசரிக்கும் குணம், கனத்திற்குரிய குணங்கள், சுயநல மின்மை, பணிவு, விசுவாசம் இவைகளைக் காணும்போது சுலபமாக அவர்களும் தேவனு டைய வழிக்கு இழுக்கப்படுவார்கள் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. அருமையானவர்களே இந்த சூனேமி யாளைப் போல நாமும் உபசரிப்பு குணத்தை பெற்று தேவனுக்கு பெருமையையும், புகழையும் சேர்ப்போம்.

**R.R. NAYAGAM B.B. CHOATE**


தொலைபேசி என் மாற்றம்

CHANGE IN TELEPHONE NUMBER

**பழைய என் : ~~20030~~**

**புதிய என் : 30030**



**OLD NO : ~~20030~~**

**NEW NO : 30030**

# பந்தயத்திலே இப்படியே ஓடுவோம்

**கோ**சேன் என்கிற பட்டணத்தில் கோத்திரப்பிதாக்கள் குடியேறிய பின், யோசேப்பை அறியாத கொற்றவன் எழும்பி எகிப்தில் ஏகமாய் எண்ணிக்கையில் வளர்ந்து கொண்டிருந்த எபிரேயர்கள் மீது ஆளோட்டிகளை அமர்த்தி கொத்தடிமைகளாய் மாற்றி அவர்களுக்கு கொடுமை பல புரிந்து கொடுங்கோலோச்சின போது, இஸ்ரவேலர்கள் ஈடில்லா இறைவனிடம் இரஞ்சினதினாலும், அல்லும் பகலும் அகிலத்தை வருவாக்கின உன்னதரிடம் ஊன் வருந்தி ஊக்கமுடன் கெஞ்சி மன்றாடியதாலும், ஏக்கம் கொண்ட எபிரேயர்களுக்கு மோசேயைக் கொண்டு ஓங்கிய புயத்தினால் விடுதலை கொடுத்து, பின் யோசுவாவைக் கொண்டு யோர்தானைக் கடக்கச் செய்த நிகழ்விலிருந்து "அன்பு" "ஜெபம்" "தியானம்" "பயபக்தி" "போதனை" "இரக்கம்" "மாதிரி" என்கிற கற்களை அளவிட்டுப் பார்த்தோம்.

புதிய ஏற்பாட்டின், பாதிப்பக்கங்களுக்கு மேல், பரிசுத்த ஆவியானவரின் துணைகொண்டு யாத்துக்கொடுத்த அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்துப் பட்டணத்திலுள்ள சபையாருக்கு எழுதுகையில், **"பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள். ... நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்"** (1 கொரி 9:25) என்று கூறியிருக்கிறார். வாலிபர்களாகிய நாம் இளவயது என்கிற சாலையிலே ஓடுகிறபடியால், அதில் இடறாமல் ஓட இச்சை அடக்கத்துடன் ஓடவேண்டிய திருப்பதால், இம்முறை "இச்சை அடக்கம்" என்கிற கல்லை உங்களுக்கு முன் நிறுத்துகிறேன்

## "இச்சை அடக்கம்" எனும் கல்

"இச்சை" இச்சொல்லுக்கு நாம் அர்த்தம் காண முற்படும் போது, அது நமக்குச் சொந்தமல்லாத ஒன்றை, எந்த வழிமுறையாயிலும் நம்முடையதாக்கி, சொற்பகாலமாவது சொந்தம் கொண்டாட வேண்டும் என்ற எல்லை கடந்த அல்லது கட்டுப்படுத்த முடியாத உணர்வைத்தான் நாம் "இச்சை" என்கிறோம். கரையை தாண்டிய அலைகள் எப்படித் தீமை பல புரிந்தபின், தன் எல்லைக்குள் அடங்குகிறதோ, அதைப்போல வேலியிடாத எண்ணத்தினால் வரும் தீமையினை நாம் தவிர்த்திட வேண்டுமென்பதற்காக "இச்சை" எனும் இச்செயலை நாம் அடக்கிடல் அழகு.

எழில்மிகு ஏதேன் தோட்டத்தில் ஆதித் தம்பதிகள் ஆனந்தமாக, அண்சராசரங்களை சிருஷ்டித்த ஆண்டவருடன் உறவாடிய போது, எத்தன், ஏமாற்றுபவன் பிசாசு, தேவன் சொன்ன வார்த்தைகளைக் கூட்டி, அத்தோடு **"தேவர்களைப் போலிருப்பீர்கள்"** என்ற இலவச இணைப்புத் தகவல்களைத் தந்து, **"புசிப்புக்கு நல்லது பார்வைக்கு இன்பம், புத்தியைத் தெளிவாக்கும்"** என்ற அக்கினியாஸ்திரங்களைப் பயன்படுத்தியதால் பாவம் என்னும் படுகுழியில் எளிதாக, ஏவாளும், அவள் ஏவியதால் ஆதிமனிதன் ஆதாமும், "இச்சை" என்னும் இப்பாதக செயலால் விழுந்தார்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல், கொரிந்து சபையாருக்கு எழுதும் போது, "பந்தய சாலையிலே ஓடுகிறவர்கள்" பற்றி எழுதியிருக்கிறார். அன்றைய கொரிந்துப் பட்டணத்தில் "ஜிம்னாஸ்டிக்ஸ்" என்ற விளையாட்டு மிகப் பிரசித்தி பெற்றதாக இருந்தது. கொரிந்துப்பட்டணத்திலுள்ள கிறிஸ்தவர்கள், பந்தயத்திற்குப் போராடுகிறவர்கள், எப்படி அதிகாலை எழுந்து உடலை வருத்தி பயிற்சி செய்வதும், தங்களுக்கு மிகவும் விருப்பமான உணவாக இருந்தாலும், அளவோடு உண்பதும், அல்லது அறவே உண்ணாமலிருப்பதும், ஒருநாள் ஒருமுறை பந்தயத்திலே ஓடுவதற்கு, பலநாள், பலமுறை ஓடி ஒத்திகை பார்ப்பதும் நன்றாகவே அறிந்திருப்பார்கள் பவுல் கொரிந்துப்பட்டணத்தில் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு இதைச் சொல்லிவிட்டு இப்படி ஓடினாலும், இப்பூமிக்குரிய பந்தயத்தில் ஒருவருக்கே பரிசு கிட்டும், ஆனால் கிறிஸ்தவ பந்தயத்தில் முறைப்படி ஓடி முடித்தாலே போதும், முடிக்கும் எல்லோருக்கும் பரிசு உண்டு, என்று கிறிஸ்தவத்தின் மேன்மையைப்பற்றி எடுத்து எழுதி ஊக்கப்படுத்துகிறார்.

வாலிபர்களே! இப்புவியின் வாழ்வில், பிசாசு நம்மிடத்தில் இச்சையைத் தூண்டும் போது, ஏதோ அசிங்கமானதைக் கொண்டு நம்மைக் கவர்ந்து இழுக்க முயற்சிப்பான் என்று நினைக்காதீர்கள். அவன் வஞ்சகன், அழகு என்னும் ஆபத்தை வலையாக விரித்து, நம்மை கண்ணியில் அகப்படச் செய்வான் உதாரணம் ஒன்றை கவனியுங்கள், இஸ்ரவேல் ஜனங்கள், எகிப்து தேசத்திலிருந்து வெளிவந்து, "யோர்தானுக்கு இக்கரையிலே மோவாபின் சமனான வெளிகளில் பாளயமிறங்கினார்கள்." (எண் 22:1) இஸ்ரவேல் ஜனங்களுடன் தேவன் இருந்தபடியாலும், அவர்கள் ஜனத்தொகை அதிகமாக இருந்தாலும் மோவாப் தேசம் கலக்கம் அடைந்தது.

மோவாப் தேசத்து அரசன், அதிகமாக ஆழ்ந்த யோசனை செய்து சதி ஒன்றை செய்ய முயற்சி செய்து பிலேயாம் என்னும் தீர்க்கதரிசியைக் கொண்டு

இஸ்ரவேல் ஜனத்தை சபிக்க நினைத்தான் ஆனால் தேவனோ. அவனுடைய வாயில் ஆசீர்வாதமான வார்த்தைகளையே கொடுத்தார் "இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம்" (எண் 24:1) என்று கண்டவுடன், அநீதத்தின் கூலிக்காக சதி வலையை இன்னும் தடித்த கயிறுகளைக் கொண்டு பிண்ணி அகலமாய் விரிக்கலானான். மோவாபிய குமாரத்திகளாடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள் இஸ்ரவேல் ஜனங்கள் (எண் 25:1). வாலிபர்களே முதல் சதி, நிறைவேறவில்லை என்றவுடன், தேவன் சாபத்தை ஆசீர்வாதமாகவே மாற்றினார் என்ற உடன் தேவனே அவர்களை சபிக்கும்படி, வேசித்தனத்தைத் தூண்டிவிட்டு வேறே தேவர்களை வணங்கும் அளவிற்கு காரியங்களை நடப்பித்தான் பிசாசு, பிலேயாமின் மூலமாக.

வாலிபர்களே! கவனியுங்கள் அதன் விளைவை "கர்த்தருடைய கோபம் மூண்டது ( எண் 25:3) பினெகாஸ் என்னும் வாலிபன் செய்த அரிய செயலால் (எண் 25:8) பிசாசு பின்னிய கடும் வலையின் கயிறுகள் அறுபட்டு தேவனுடைய உக்கிரகோபம் நின்றது. சாத்தானின் தந்திர செயலை கவனித்தீர்களா! உங்களை தேவனிடம் இருந்து நேரிடையாகப் பிரிக்க முயன்று நடக்கவில்லை என்றால், உடனே "கொரில்லாப்போர்" புரிவான் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இப்போரைப்பற்றி நாம் சிந்திக்கையில் பச்சை மரத்தினுடே பதுங்கியிருந்து தாக்குவார்கள் பகைவர்கள், பார்க்க பசுமை வாய்ந்த பச்சை நிறமாக இருந்தாலும், மறைந்திருப்பதோ பழிவாங்கும் பசப்பர்கள் அதைப்போலவே சாத்தானும் சத்தமில்லாமல் பணம், பதவி, பவுன், பட்டம், அந்தஸ்து, பெண் போன்றவற்றுக்குப் பின் நின்று பசப்புநாடகமாடுவான் என்பதை அறிந்து இச்சையடக்கம் என்னும் கல் சுமந்து நித்தியக்கரை சேருவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல் "பந்தயத்திற்குப் போராடுகிறவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படி அப்படி ஓடுகிறார்கள் நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்" என்கிறார்! வாலிபர்களே! நீங்கள் வெற்றி வீரர்களாக இச்சை அடக்கத்துடன் ஓடி முடித்த பின்பு, உங்களுக்கு நீதியின் தேவன், "**நீதியின் கிரீடத்தையும்**" (2தீமோ 4:7) ஜீவனுள்ள தேவனுக்காக சோதனைகளை சகித்து பொன்னாக விளங்கின பின்பு "**ஜீவகிரீடத்தையும்**" (யாக் 1:12; வெளி 2:10) வாலிபர்களாகிய நாம் விசேஷமாக கர்த்தருடைய பணியை செய்கிறவர்கள் மந்தைக்கு மாதிரியாக இருந்த பின்பு "**மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப்**" பெறுவோம் என்பதை அறியுங்கள். இப்படி தேவன் வாக்குத்தந்த எல்லா கிரீடத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள அவர், உங்களுக்கு அநுக்கிரகம் செய்வாராக! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்.**

# சங்கீதம் ஒரு கண்ணோட்டம்

**காலம்** : தாவீது எழுதின சங்கீதங்கள் 1020-975 கி.மு., மோசே எழுதினது 1405 கி. மு., ஆசாப் - 1000 கி.மு.

**ஆசிரியர்** : இப்புத்தகத்தை மொத்தம் ஏழு நபர்கள் எழுதியிருக்கிறார்கள். தாவீது, ஆசாப், கோராகின் புத்திரர், சாலொமோன், மோசே, எஸ்ராகியனாகிய ஏமான், எஸ்ராகியனாகிய ஏத்தான்.

## இந்நூல் பற்றி

a) பொதுவாகவே இந்நூல் ஆழமான உணர்வுகளை கொண்டதாகவும், தேவனை மையமாக வைத்தும் எழுதப்பட்டிருக்கிறது.

b) இந்நூலுக்ககான எபிரேய தலைப்பு "தெகீலிம்" (TEHILLIM) என்பதாகும். அதற்கு துதிப் பாடல்கள் என்று பெயர்.

c) இரண்டு முக்கிய காரியங்களைக் குறித்து இந்நூலில் அதிகம் இடம்பெற்றிருக்கிறது.

1) ஆத்துமா (132 முறை) 2) இருதயம் (128 முறை)

d) இந்நூலை நாம் ஏழு வகையாகப் பிரிக்கலாம்.

1) பக்தி விருத்தியின் சங்கீதம் (Didactic) - 1, 119, 139
2) துதியின் சங்கீதம் ( Praise - 8, 19, 46, 47, 48, 115, 136)
3) நன்றி செலுத்துதலின் சங்கீதம் (Thanksgiving 30, 34, 40, 65, 67)
4) புலம்பலின் சங்கீதம் (Lament - 13, 17, 51, 73)
5) நம்பிக்கையின் சங்கீதம் ( Trust - 3, 4, 16, 23, 25)
6) மேசியாவின் சங்கீதம் ( Messianic - 2, 24, 101, 110)
7) சாபம் கூறும் சங்கீதம் ( Imprecatory - 35, 69, 109)

## இந்நூலின் செய்தி

1) "கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார், ஆனால் துன்மார்க்கருடைய வழியோ அழியும்". ஒன்றாம் சங்கீதத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட இச்செய்தி இந்நூல் முழுவதும் இடம் பெற்றிருக்கிறது.

2) கர்த்தருக்குப் பயப்படுதலே எல்லா ஆசீர்வாதங்களுக்கும் ஊற்று.

3) நம்க்குமுன் இருவழிகள் உண்டு, அது மரண மற்றும் ஜீவ வழி. எதைத் தேர்ந்து எடுக்கிறோம் என்பது நமது இருதயத்தை பொறுத்தே இருக்கும்.

# காணாமற்போன ஒரு ஆட்டின் மதிப்பு

அன்புள்ள தம்பி தங்கைகளே! நமது ஆண்டவர், இப் பூமியில் இருக்கும்போது தன்னை சந்திப்பவர்களிடம் போதிக்க பல விதமான வழிகளை உபயோகித்தார். சில நேரங்களில் அவர் தலை சிறந்த பிரசங்க-ங்களைச் செய்தார். (அவருடைய அழகான "மலைப் பிரசங்கம்" போல மத் 6-8) சில நேரங்களில் அவர் அற்புதங்களை செய்தும், (தனது தோழனான லாசருவை எழுப்பினதுபோல் லூக் 11 : 43 - 44), மற்றுமாக அவர் தான் சொல்ல வந்ததை கேட்பவர்கள் முழுமையாக புரிந்துகொள்ளும்படி சில நேரங்களில் சில உவமைகளையும் கூறுவார். அதில் ஒரு உவமையைத் தான் நாம் இந்த மாதம் காணப் போகிறோம். அது என்னவென்று கேட்கிறீர்களா ? உங்கள் வேதாகமத்தை திறந்து லூக் : 15 : 4-7 கவனமாகப் படியுங்கள்.



இயேசு தன் வார்த்தைகளைக் கேட்கக் கூடியிருந்தவர்களை பார்த்து, 100 ஆடுகளை உடைய ஒரு மனிதனைப் பற்றி கூறினார். அவைகளில் ஒன்று சுற்றித்திரிந்து காணாமற்போனது அந்த மனிதன் என்ன செய்தான்? அவன் தனக்குள்ளாக "ஓ ! எனக்குத் தான் 99 ஆடுகள் உள்ளனவே என்று சாதரணமாக விட்டு விட்டானோ, அந்த ஒரு ஆடு அவ்வளவு முக்கியம் இல்லை என்று விட்டானோ? இல்லை அவன் காணாமற்போன அந்த ஒரு ஆட்டின் மீது மிகுந்த அக்கறை காட்டினான். அவன் அந்த ஒரு ஆட்டினிமித்தம் மற்ற தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் விட்டு, காணாமற் போன ஆட்டின் மீது மிகுந்த அக்கறை செலுத்தினான். அவன் அதைக் கண்டுபிடித்த போது, தன் சிநேகிதரையும் அயலகத்தாரையும் கூட வரவழைத்து தன்னோடு சந்தோஷப்படுங்கள் என்றான். அவன் தன் சிநேகிதருக்கு "காணாமற்போன என் ஆட்டை

கண்டுபிடித்தேன்" என்று விவரித்தான்.

இயேசு இந்த உவமையைச் சொல்லுவதின் நோக்கமென்ன ? அவர் ஒரு ஆட்டினுடைய மதிப்பைக் குறித்து ஜனங்களுக்கு எடுத்துரைத்தாரா ? இல்லை ஒருபோதும் இல்லை. **மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாயிருக்கிறதைப் பார்க்கிலும், மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்.** (லூக் 15 : 7) என்று இயேசு இந்த உவமையை அவர்களுக்கு விளக்கிச் சொன்னார்.

இயேசு தம்மைச் சுற்றியிருந்த ஜனங்கள் முக்கிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் ஆவல் கொண்டிருந்தார்.

**முதலாவது**: யோவான் : 10 : 11 ல் அவர் தன்னை நல்ல மேய்ப்பான் என்று கூறினார், மற்றும் அவர் தனது உயிரையே தனது ஆடுகளுக்காகக் கொடுக்கச் சித்தம் கொண்டிருக்கிறார். அந்த "ஆடுகள்" கிறிஸ்தவர்களாக அவருடைய சத்தத்திற்கு கீழ்படிகிறவர்கள் தான்.

**இரண்டாவது** : இயேசு தன்னை கேட்ட ஜனங்கள் ஒரு ஆத்துமாவின் உண்மையான மதிப்பை அறிந்து கொள்ள விரும்பினார், மற்றுமாக ஒரு ஆத்துமாவை இழப்பது எவ்வளவு பயங்கரம் என்பதையும் அறிய விரும்பினார். மத் : 16 : 26ல் கிறிஸ்துவானவர் "**மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன ? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்**" என்று கேட்பார். இரண்டு அதிகாரத்திற்குப் பின் அதே மத் : 18 : 11ல் அவர் "**மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தேன்**" என்று கூறினார். நம்முடைய ஆத்துமாவை விட விலையேற பெற்ற வேறு ஒன்றையும் நாம் சொந்தமானதாகக் கொண்டு இருக்கவில்லை.

வெகுதூரம் சென்று, துலைந்து போய், மரித்து போகிற ஆடுகளைப்போல் நாம் இருப்பதை இயேசு ஒருபோதும் விரும்புகிறதில்லை, மாறாக மீட்பராகிய அவர் அருகில் எப்போதும் நாம் இருந்து பாதுகாக்கப்பட்டு பரலோகத்தில் என்றென்றும் வாழவே விரும்புகிறார். நம்முடைய ஆத்துமாக்கள் அழிந்து போவதற்கு பதிலாக, அவை விலையேறப் பெற்றது என்று அறிந்திருந்தார். கேள்வி என்னவென்றால் நாம் அதை அறிந்திருக்கிறோமா ? என்பது தான். அன்பு தம்பி தங்கைகளே! இது வரை நாம் அதை அறிந்திருக்கவிட்டாலும், இனி மேலாவது நமது அன்பின் ஆண்டவரின் சத்தம் கேட்டு, அவரையே பின் தொடர்கிற ஆடுகளாக இருப்போம்! ஆமென்

தமிழில் : **ஏபில் ரோஜர் நாயகம்.**

# உலக
# வீடியோ வேதாகமக் கல்லூரி
## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

வேதாகம முழுநேரப் பயிற்சிக்கு தங்களை அர்ப்பணிக்க வாஞ்சையுள்ள வாலிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**காலம்** : 3 வருடம் (செமஸ்டர் முறை)
கல்வித் தகுதி : +2 தேர்ச்சி (அல்லது) பட்டப்படிப்பு
(திருமணமாகாத ஆண்கள் மட்டும்)

**பட்டம்** : பி.பி.எஸ் (Bacheler of Biblical Studies)

**தனித்தன்மை** : இந்தியாவின் ஒரே வீடியோ வேதாகமக் கல்லூரி

**ஆசிரியர்கள்** : உலகெங்கிலும் [illegible] தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த [illegible] (அமெரிக்கா)

**போதிக்கும் முறை** : வீடியோ மூலம் மொழி பெயர்ப்புடன் போதிக்கப்படுகிறது.

*தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்.*

மேலும் விபரங்கட்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

இயக்குநர்

**உலக வீடியோ வேதாகமக் கல்லூரி**

தாராபுரம் ரோடு,
காங்கயம் - 638 701.
இந்தியா
தொலைபேசி : (04257) 30030

2. அவர் முற்கோபியாக இருக்கக் கூடாது - அல்லது அவர் பழிவாங்கும் எண்ணமுள்ளவராகவோ, எரிந்து விழக்கூடியராகவோ, அல்லது மூர்க்க குணமுள்ளராகவோ இருத்தல் கூடாது.

3. தன் இஷ்டப்படி செய்யாதவர் - அதாவது அவர் அதிகார போக்கு மனப்பான்மை மிக்கவராகவோ, இறுமாப்பு உள்ளவராகவோ அல்லது கர்வமிக்கவராகவோ இருத்தல் கூடாது.

4. மதுபான பிரியராயிருக்கக் கூடாது - அல்லது ஒயின் போன்ற லாகிரி (போதை) வஸ்துக்களைப் பயன்படுத்துபவராக இருக்கக் கூடாது.

5. சண்டை பண்ணாதவர் - அதாவது அவர் விதண்டாவாதமிக்கவராய், சண்டை போடக்கூடியராய், அல்லது தனது செயல்களில் சண்டையிடுபவர்கள்போல் நடந்து கொள்ளக் கூடாது.

6. அவர் அடிக்கிறவராயிருக்கக் கூடாது - அல்லது சண்டையிடக்கூடியவராகவோ, வம்பிற்கு இழுக்கக் கூடியவராகவோ, அல்லது பிறரை அடித்து துன்புறுத்தக் கூடியவராகவோ, இருந்து விடக்கூடாது.

7. இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவராயிருத்தல் கூடாது - அல்லது கீழ்த்தரமான முறையில் பணம் சம்பாதித்தலோ, நேர்மையற்ற முறையில் சம்பாதித்தலோ கூடாது.

8. அவர் பண ஆசை இல்லாதவராயிருக்க வேண்டும் - அல்லது பேராசையுடன் சொத்து சேர்ப்பதோ, அளவுக்கு மீறிய ஆசையுடனோ பணம் சேர்க்கக் கூடாது.

**மூப்பர்களின் செயல் நிலை தகுதியாம்சங்களாவன:**

1. ஒரே மனைவியை உடைய புருஷன் - அதாவது, அவர் திருமணமானவராக இருக்க வேண்டும். ஆனால் முறையற்ற விவாகரத்து கொடுத்தவராகவோ, பலதார மணமுடித்தவராகவோ இருத்தல் கூடாது.

2. துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாமுள்ள பிள்ளைகளை உடையவராயிருக்க வேண்டும். அதாவது, பிள்ளைகள் கிறிஸ்தவர்களாகிற வயதடைந்திருக்க வேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அவர்கள் விசுவாசமிக்கவர்களாயிருக்க வேண்டும்.

3. நற்குணம் படைத்தவனாயிருத்தல் வேண்டும் - அதாவது மற்றவர்களை நல்லமுறையில் நடத்தக் கூடியவராய், முரட்டுத்தனமோ அருவருக்கத்தக்க செயலை செய்யாதவராகவோ இருக்க வேண்டும்.

4. ஜாக்கிரதையுள்ளவராயிருக்க வேண்டும் - அதாவது, அவர் விழிப்புணர்வு உள்ளவராய், கவனமுற்றவராய், பாதுகாப்பு எச்சரிக்கையுடையவராய், அலட்சியப் போக்கு இல்லாதவராய், கவனக்குறைவு அற்றவராய், மந்தமும் சோம்பலுமற்றவராய் இருத்தல் வேண்டும்.

5. தெளிந்த புத்தியுள்ளவராயிருத்தல் வேண்டும் - அதாவது, நன்கு சிந்தித்து, தீர்ப்பு வழங்குவதிலோ, தீர்மானம் எடுப்பதிலோ தீர்க்கமான முடிவு எடுக்கக்

கூடியவராயிருத்தல் வேண்டும். மேற்போக்கான தன்மை, அவசர முடிவு, உலக எண்ணம் ஆகியவற்றில் மிதமிஞ்சிய தன்மையிருத்தல் கூடாது.

6. பொறுமையுள்ளவராயிருக்க வேண்டும் - அதாவது மற்றவர்களிடத்தில் சகிப்புத்தன்மை, உள்ளவராய், எரிச்சலடையாதவராய், மற்றவர்களை குறை கூறித்திரிபவராயிராமலும், கோபமூட்டப்படுகிற சூழ்நிலையிலும் முறுமுறுக்காதவராயிருத்தல் வேண்டும்.

7. இச்சையடக்கமுள்ளவராயிருக்க வேண்டும் - அதாவது, அவரது ஜீவியத்தில் கட்டுப்பாடுள்ளவராயும், தீமையினின்று விலகி நிற்கக் கூடியவராயும், ஆசைகளை தவிர்க்கும் மனக்காட்டுப்பாடு உள்ளவராயும், தனது நடத்தையிலும் பேச்சிலும் கட்டுப்பாடு உள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

8. நீதிமானாயிருக்க வேண்டும் - அதாவது, சரியான காரியங்களுக்கு தன்னை ஒப்புக் கொடுத்து, நியாயமான, நீதியான காரியங்களில் செயல்படக்கூடியவரும், மற்றவர்களிடத்தில் அநீதியாக நடவாமல், ஆராய்ந்து பாராமல் உணர்ச்சிவசப்பட்டு மற்றவரை தவறாகக் கணக்கிடக்கூடியவராய் இருக்கக் கூடாது.

9. யோக்கியதையுள்ளவராயிருக்க வேண்டும் - அதாவது, பிரிவு காட்டக்கூடியவராக, இரக்க குணமுள்ளவராக, இயல்பிலே மரியாதைக்குரியவராக இருந்து கசப்பான வைராக்கியமற்றவராகவும், நியாயமற்றவைகளைச் செய்யாதவராகவும், கடுமையான நடக்காதவரும், சமத்துவ எண்ணமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

10. பரிசுத்தமுள்ளவராயிருத்தல் வேண்டும் - அதாவது மூப்பராக நியமனம் பெறுபவர் பக்தியுள்ளவராக ஆவிக்குரிய பரிசுத்தமுள்ளவராக தேவநீதிக்குக்குத் தன்னை ஒப்புக் கொடுத்தராகவும் இருக்க வேண்டும். முழுமையான ஒப்புக் கொடுத்தல் இல்லாமலும், யெகோவாவிடத்தில் சுத்தமற்றவராகவும் இருத்தல் கூடாது.

11. நல்லோர் மேல் பிரியமுற்றவராயிருக்க வேண்டும் - அதாவது, நல்ல மனிதர்களைப் பாராட்டி, அவர்களின் நற்கிரியைகளில் உறுதியாயிருக்க ஊக்கப்படுத்தக் கூடியவராகவும் வெற்றிபெறச் செய்யச் செய்யக் கூடியவராயுமிருக்க வேண்டும். தீமையான நபர்களின் செயல்களை பாராட்டாமலும், உடந்தையானவர்களுமாய் இருக்கக் கூடாது. நபர்களின் செயல்களை பாராட்டாமலும், உடந்தையானவர்களுமாய் இருக்கக் கூடாது.

12. உபசரிப்பு செய்கிரவாயிருக்க வேண்டும் - அதாவது, மற்றவர்களின் தேவைகளை அறிந்து, அவர்களது நலனில் அக்கரை காட்டக் கூடியவர்களாயிருக்க வேண்டும். குறிப்பாக அந்நியர்களையும் உபசரிக்கக் கூடியவராயும் இருக்க வேண்டும். மற்றவர்களின் காரியத்தில் அக்கரையற்றவராக, தோழமைக் குணமற்றவராக இருக்கக் கூடாது.

13. போதக சமர்த்தராயிருக்க வேண்டும் - அதாவது, தேவனுடைய வசனத்தில் அதிகமான அறிவு பெற்றவராகவும், போதிக்கிற திறமையையும்,

போதிக்கிற ஆவல் மிகுந்தவராயுமிருக்க வேண்டும், இப்படியாக, இயல்பான திறமை மற்றும் வேத அறிவு அற்றவராக இருக்கக் கூடாது.

14. எதிர் பேசுகிறவர்களை கண்டனம் பண்ணி / புத்தி சொல்லக் கூடியவராயிருக்க வேண்டும் - அதாவது, முரண்பாடாய் போதிக்கிறவர்களுக்கு முன்பாக சத்தியத்தை ஆதாரித்து போதிக்கும் அளவுக்கு போதிய அறிவும், திறமையும் இருக்க வேண்டும். அறியாமையுள்ளவராயிருந்து, ஆரோக்கியமான உபதேசத்திலே திறமையற்றவராயும், ஆதாயத்திற்காகப் போதிக்கும் கள்ளப் போதகர்களிடமிருந்து மந்தையை பாதுகாக்கும் திராணியற்றவர்களாயுமிருத்தல் கூடாது.

15. குற்றஞ்சாட்டப்படாதவாயிருத்தல் வேண்டும் - அதாவது, அவர் கேள்விக்குரியவராயிராமல், உத்தம குணமுற்றவராய் இருக்க வேண்டும். எப்பொழுதும் தவறானக் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளானவராயிருத்த கூடாது.

16. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவராயிருக்க வேண்டும் - அதாவது, அவர் நல்ல ஒழுக்க ரீதியான, நேர்மையான காரியங்களில் நற்பெயர் பெற்றவராகவும், நடத்தையில் உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களல்லாதோரிடமிருந்து வன்மையான குற்றச் சாட்டுக்குரியவராயிருத்தல் கூடாது.

## மூப்பர்களின் கடமைகள்

கிறிஸ்தவ மூப்பர்கள் அல்லது மேய்ப்பர்களின் தகுதியாம்சங்கள் இரண்டு வகையாக எதிர்மறையாகவும், செயல்நிலை தகுதியம்சங்களாயும், பிரிக்கப்பட்டிருப்பது போலவே, மூப்பர்களின் கடமைகளும் இருவகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை, தலையாய கடமைகள் எனவும், இரண்டாம் பட்சக்கடமைகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன. தலையாயக் கடமைகள் என்பது மூப்பரின் வாழ்வு சார்ந்த கடமைகளாகும். இரண்டாம் பட்ச கடமைகள், சபைக் காரியங்களில் மூப்பர்கள் நிறைவேற்றி வேண்டிய பொறுப்புகளைக் குறிக்கும்.

## மூப்பர்களின் தலையாயக் கடமைகள்

1. மூப்பர்கள் தன்னைக் குறித்து எச்சரிக்கையுள்ளவராயிருத்தல் வேண்டும். தாழ்மையுள்ளவராக, ஒப்புக் கொடுத்தவராக, ஜெபம் நிறைந்தவராக, யோக்கியதையுள்ளவராக, கிறிஸ்துவைப்போல் வாழக் கூடியவராக இருக்க வேண்டும்.

2. மூப்பர் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்தக் கூடியவராக இருக்க வேண்டும். "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் விசாரிக்க அறியாதவனாயிருந்தால், தேவனுடைய குடும்பத்தை அவன் எப்படி விசாரிப்பான்?" என்பதே.

3. மூப்பர் விசுவாசமுள்ள பிள்ளைகளையுடையராயிருக்க வேண்டும்.

4. மூப்பரின் பிள்ளைகள் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும். அடங்காதவர் எனப் பெயரெடுக்கும் பிள்ளைகள், துரதிஷ்ட வசத்தால் பயனற்ற

தீய பழக்கங்களும் அடிமையாகும் பிள்ளைகள், சபையில் மூப்பராக, பணியாற்றும் தங்களது தகப்பனை வெற்றி பெற இயலாதாவாறு தவிர்க்கின்றனர்.

5. மூப்பர் விசுவாச வசனங்களை கை கொண்டிருத்தல் வேண்டும். வசனத்தை அவர் மதிக்கவும், போதிக்கவும், அதிலே உறுதியாய் தரித்திருக்கவும், அனைத்து சத்துருக்களின் கரத்திலிருந்து பாதுகாக்கவும் செய்ய வேண்டும்.

6. மூப்பர் மந்தைக்கு மாதிரியாக இருக்க வேண்டும். அவர் தனது வாழ்க்கை முறையில் சபைக்கு அவப் பெயரை சம்பாதிக்கக் கூடிய வகையில் வாழாமல், கிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுத்த வாழ்க்கை வாழ்ந்து, எல்லா மனுஷருக்கும் முன்பாக தனது நன்னெறியைக் காத்து நடக்க வேண்டும்.

7. மூப்பரின் இரண்டாம் பட்சக் கடமைகள் மந்தையைச் சார்ந்த கடமைகள் - அதாவது, மந்தை (சபை) நலனைக் கருத்தில் கொண்டு, தனது பொறுப்புகளையும், கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும்,

**மூப்பர்களின் இரண்டாம் பட்சக் கடமைகள்:**

1. மூப்பர் மந்தையைக் குறித்து எச்சரிகையாயிருக்க வேண்டும். அவர் ஒவ்வொரு தனிப்பட்ட அங்கத்தினர் நலனில் அக்கரை காட்ட வேண்டும். அவர் பட்சாதாபமுள்ளவராக நடந்து கொள்ளக் கூடாது.

2. கண்காணிப்பை விரும்பக் கூடியவராயிருக்க வேண்டும். ஆத்துமாக்களின்மேல், பிரியம் காட்டி, ஊழியம் செய்யும் மனோ வாஞ்சை இருத்தல் வேண்டும். ஆத்துமாக்களைக் கண்காணிப்புச் செய்ய வேண்டும்.

3. மூப்பர் மந்தையை போஷிக்க வேண்டும். மந்தையாகிய சபையை ஆரோக்கியமான உபதேசத்திலே போதித்து நடத்த வேண்டும் நல்லவைகளை உபதேசம் பண்ணக் கூடியவராய் இருக்க வேண்டும். அந்த பொறுப்பு நேர்மையுடன் செயல்படுத்த வேண்டிய ஒரு தொடர் ஆயத்த வேலையாகும்.

4. மூப்பர் மந்தையை நன்றாக ஆளுகை செய்து, நடத்த வேண்டும். ஒரு தகப்பன் தன் குடும்பத்தை நடத்துவதுபோல, மூப்பர் மந்தையாகிய சபையை வழி நடத்த வேண்டும். அதாவது தவறுகளுக்கு இசைந்துபோகாமலும், தேவனுடைய பிள்ளைகள் அதிகாரிகளைப்போல் செயல்படாமலும் நடத்த வேண்டும்.

**சபையின் பெரிதான தேவை**

பிராந்திய சபைகளை ஆளுகை செய்து கண்காணிக்கத்திராணியுள்ள, தகுதியும் பரிசுத்தமும் நிறைந்த மூப்பர்கள் சபைக்குத் தேவைப்படுவது போன்ற வேறெந்த தேவையும் சபைக்கு பெரிதல்ல. ஒவ்வொரு பிராந்திய சபையும் தங்களை நடத்துகிற மூப்பர்களுக்கு கீழ்ப்படிதலுடன் நடக்க வேண்டும். சபை ஒரு ஜனநாயக ஆட்சியமைப்பு உடையதன்று, மாறாக தேவனுடைய உரிமைக்குள்ளானது, ஆதலால் தகுதி வாய்ந்த மனிதர்களால் அது கண்காணிப்பைப் பெற வேண்டும். எந்த சபையும் தகுதிவாய்ந்த மனிதர்களை மூப்பர்களாக (கண்காணிகளாக) பெற்றிராத பட்சத்தில், அது தனது ஆவிக்குரிய உச்சநிலையை அடைய முடியாது.


தமிழில் : **ஆறுமுகம்**



# HEAR THE VOICE OF TRUTH

**ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 - 9.00 p.m.<br>9.00 - 9.15 p.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Sun, Mon<br>Tue, Thu | 2.00 - 2.15 p.m. | Box. 80<br>Kakinada - 533001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. Varghese |



***Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures***

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

REGISTERED NEWS PAPER
RNI No. 47661/87 - NEW DELHI
Postal Regn. No. TN/WR/ER/77/2001.
Licensed to Post without Pre Payment No. TN/WR/ERD/03/WPP/2001.

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக்
கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு

## ஓர் இனிய செய்தி.

ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு
செய்யப்பட்ட, அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில்
நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன் பெறலாம்.
இது 15 பாடங்களைக் கொண்ட

## ஓர் இலவசப் பயிற்சி.

இப்பயிற்சியை வெற்றிகரமாக
முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்,
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி,
த.பெ.எண் - 27, காங்கேயம் - 638 701. தமிழ்நாடு, இந்தியா.

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor : S.RAJANAYAGAM,